නිදහස් මාධ්‍ය ව්‍යාපාරය
சுதந்திர ஊடக இயக்கம்
FMM SRI LANKA Free Media Movement

# මාධ්‍ය නිදහස: නිරීක්ෂණ වාර්තාව
# ஊடக சுதந்திரம்: கண்காணிப்பு அறிக்கை
# Media Freedom Rights Monitoring Report

MFRMD

## 2022 ஒக்டோபர்

Vol. 02 - தொகுதி 10



பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டிருந்த மாணவர் செயற்பாட்டாளர் ஹசான் ஜீவந்த விடுதலை செய்யப்பட்டமை.



பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ள வசந்த முதலிகே மற்றும் கல்வெவ சிறிதம்ம தேரர் ஆகியோரின் தடுப்புக்காவல் உத்தரவை நீடிக்க வேண்டாமென இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு அறிவித்தமை.



ஊடகவியலாளர் மயில்வாகனம் நிமலராஜன் படுகொலை செய்யப்பட்டு 22 வருடங்கள் பூர்த்தியாவதை முன்னிட்டு வெவ்வேறு மூன்று நினைவேந்தல் நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டமை.

ஊடக சுதந்திரம் குறித்து அக்டோபர் மாதத்தில் நிகழ்ந்த சம்பவங்கள் மற்றும் கடந்தகால சம்பவங்களின் வளர்ச்சிப்போக்குகள் மற்றும் அவைகள் தொடர்பான அவதானிப்புகள் இவ்வறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். ஊடகவியலாளர்கள் மற்றும் பொதுமக்களின் கருத்துச் சுதந்திரம் மற்றும் பேச்சுச் சுதந்திரம் தொடர்பான நிகழ்வுகள் மற்றும் புதிய சட்ட உருவாக்கம், சட்டச் சீர்திருத்தங்கள் மற்றும் சட்ட உருவாக்கம், சட்டத் திருத்த முன்மொழிவுகளுக்கான தேசிய மற்றும் சர்வதேச கருத்துகள் போன்றவற்றிலும் இந்த அறிக்கை கவனம் செலுத்துகிறது. ஊடக சுதந்திரம் மற்றும் ஊடக உரிமைகள் தொடர்பில் கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காகச் சுதந்திர ஊடக இயக்கம் தேர்ந்தெடுத்துள்ள பகுதி கூறுகள் மற்றும் நோக்கங்களுக்கு அமைய 15 நிகழ்வுகள் மற்றும் சம்பவங்கள் ஒக்டோபர் 2022 அறிக்கையில் உள்வாங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். இவற்றில் ஊடகவியலாளர்களின் பாதுகாப்பு மற்றும் உத்தரவாதம் தொடர்பான 02 சம்பவங்கள், சட்டவிதி முறைகள் அல்லது சட்டரீதியான கட்டுப்பாடுகள் தொடர்பான 11 சம்பவங்கள், கட்டமைப்பு ரீதியான விதிமுறைகள் தொடர்பான 02 சம்பவங்கள் இங்கு அவதானிக்கப்பட்டுள்ளன.

## அக்டோபர் மாதத்தில் கண்காணிக்கப்பட்ட சம்பவங்கள்:

1. கொழும்பின் பல பகுதிகளை உயர் பாதுகாப்பு வலயங்களாகப் பெயரிட்டு அரசாங்கம் வெளியிட்ட வர்த்தமானி அறிவித்தல் ரத்து செய்யப்பட்டமை.
2. களனி மற்றும் ரஜரட்ட பல்கலைக்கழக மாணவர்கள் குழுவொன்றை பயங்கரவாத தடுப்பு மற்றும் விசாரணை பிரிவிற்கு விசாரணைக்காக அழைத்தமை.
3. பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டிருந்த மாணவர் செயற்பாட்டாளர் ஹசான் ஜீவந்த விடுதலை செய்யப்பட்டமை.
4. போராட்டத்தின் செயல்பாட்டாளரான பைசான் அகமத் கைது செய்யப்பட்டு பின்னர் விடுதலை செய்யப்பட்டமை.
5. காலிமுகத்திடலில் நடைபெற்ற "போராட்ட மாவீரர் நினைவேந்தல்" நிகழ்ச்சிக்குப் போலீசார் இடையூறு விளைவித்ததுடன், அதில் பங்கேற்ற 6 பேரைக் கைது செய்தமை.
6. வழக்கறிஞர்கள் மற்றும் தொழில் வல்லுனர்களின் போராட்டத்தைத் தடுக்க வேண்டும் என்று காவல்துறை விடுத்த கோரிக்கையை நீதிமன்றம் நிராகரித்தமை.
7. ஒக்டோபர் 9ஆம் திகதி காலிமுகத்திடல் பூமியில் அமைதியான முறையில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள்மீது பொலிசார் தலையிட்டமை தொடர்பில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு சுயமாக விசாரணைகளை ஆரம்பித்தமை.

8. அரச ஊழியர்களின் கருத்து சுதந்திரத்தை கட்டுப்படுத்தும் வகையில் வெளியிடப்பட்டுள்ள சுற்றறிக்கையை ரத்து செய்யுமாறு தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பு அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளது.

9. பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ள வசந்த முதலிகே மற்றும் கல்வெவ சிறிதம்ம தேரர் ஆகியோரின் தடுப்புக்காவல் உத்தரவை நீடிக்க வேண்டாமென இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு அறிவித்தமை.

10. புனர்வாழ்வு பணியக சட்டமூலத்தில் குறிப்பிடப்பட்டுள்ள 'போராளி' மற்றும் 'வன்முறையாளர்கள்' ஆகிய வார்த்தைகளை அதிலிருந்து நீக்க வேண்டும் என உச்ச நீதிமன்றம் பாராளுமன்றத்திற்கு தெரிவித்தமை.

11. அமைதியான போராட்டத்தை முறைகேடாகத் தடுத்ததாக எழுந்த புகாரில் உயர் காவல்துறை அதிகாரிகள் இருவருக்கு நீதிமன்றம் நோட்டீஸ் அனுப்பியுள்ளமை.

12. அமைதியான போராட்டக்காரர்கள்மீது தாக்குதல் நடத்துவதற்கு பொலிஸ் அதிகாரிகள் மற்றும் வளங்களைப் பயன்படுத்தியமை தொடர்பில் இலஞ்சம் அல்லது ஊழல்பற்றிய சாத்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு விசாரணைகளை ஆரம்பித்தமை.

13. ஊடகவியலாளர் மயில்வாகனம் நிமலராஜன் படுகொலை செய்யப்பட்டு 22 வருடங்கள் பூர்த்தியாவதை முன்னிட்டு வெவ்வேறு மூன்று நினைவேந்தல் நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டமை.

14. காவல்துறையினர் களனி பல்கலைக்கழகத்திற்கு முன்பாக இடம்பெற்ற மாணவர் போராட்டத்தைக் கலைத்ததுடன் போராட்டத்தில் கலந்துகொண்ட 8 மாணவர்களைக் கைது செய்தமை.

15. தகவல் அறியும் உரிமைக்கான ஆணைக்குழு பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டவர்களின் தகவல்களை வெளியிடுமாறு காவல்துறைக்கு உத்தரவிட்டமை.

**அட்டவணை எண்: 01 அறிக்கையிடப்பட்ட மொத்த சம்பவங்களின் எண்ணிக்கை – 2022 ஒக்டோபர் மாதம்**

| உள்ளடக்கப்பட்டுள்ள ஆக்கக் கூறுகள் | அறிக்கையிடப்பட்ட சம்பவங்களின் எண்ணிக்கை |
|---|---|
| பாதுகாப்பு மற்றும் உத்தரவாதம் | 02 |
| சட்டவிதி முறைகள் அல்லது சட்டரீதியான கட்டுபாடுகள் | 11 |
| கட்டமைப்பு ரீதியான விதிமுறைகள் | 02 |
| **மொத்தம்** | **15** |

## ஊடகவியலாளர்களின் பாதுகாப்பு மற்றும் உத்தரவாதம்

**ஊடகவியலாளர்களின் பாதுகாப்பு மற்றும் உத்தரவாதம் எனப்படுவது ஊடகவியலாளர்கள் தங்களது தொழிலை உடல் மற்றும் மனதை ஒர்முகப்படுத்தி சுயாதீனமாகத் தமது ஊடக நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான சுதந்திர மற்றும் சுயாதீன சூழலை உருவாக்குதல் ஆகும். இது ஊடக சுதந்திரத்தின் அடிப்படை காரணியாகவும் காணப்படுகின்றது. அதே சமயம், ஊடகச் சுதந்திரம், கருத்துச் சுதந்திரம் ஆகியவற்றைப் பாதுகாக்க வேண்டுமாயின், குடிமக்கள் ஊடகங்களில் அல்லது வேறு வழிகளிலிருந்து எதிர்விளைவுகளுக்கு உள்ளாகாமல் அல்லது தனது பாதுகாப்பிற்கு எவ்வித பாதிப்புக்களையும் எதிர்கொள்ளாமல் சுதந்திரமாகத் தனது கருத்தை வெளிப்படுத்தும் சூழல் உருவாக வேண்டும். கருத்துச் சுதந்திரம் என்பது அமைதியான முறையில் ஒன்றுகூடல், அமைதியான முறையில் போராட்டம் மேற்கொள்ளல் மற்றும் எதிர்ப்பு தெரிவித்தல் போன்ற உரிமைகளை உள்ளடக்கியதாகும். இவ்வடிப்படை உரிமைகள் மீறப்பட்ட 02 சம்பவங்கள் ஒக்டோபர் மாதத்தில் அவதானிக்கப்பட்டன.**

**அட்டவணை 2: 2022 ஒக்டோபர் மாதம் : ஊடகவியலாளர்களின் பாதுகாப்பு மற்றும் உத்தரவாதம் – சம்பவங்கள் 02**

| குறிகாட்டி | அறிக்கையிடப்பட்ட சம்பவங்களின் எண்ணிக்கை |
|---|---|
| உளவியல் ரீதியான துஷ்பிரயோகம் | 02 |
| **மொத்தம்** | **02** |

01. களனி மற்றும் ரஜரட்ட பல்கலைக்கழக மாணவர்கள் குழுவொன்றை பயங்கரவாத தடுப்பு மற்றும் விசாரணை பிரிவிற்கு விசாரணைக்காக அழைத்தமை.

பி.பி.எச். சண்தருவன், டி.ஜி.எம். சந்திரசிறி, கே.எச்.எம் தருஷ லக்ஷான், எம். டில்ஷான் ஹர்ஷன, என்.எம். சஞ்சய பண்டார மற்றும் கலென்பிந்துனுவெவ தம்மரதன தேரர் உட்பட களனி மற்றும் ரஜரட்ட பல்கலைக்கழக மாணவர்கள்

பலரை பயங்கரவாத தடுப்பு மற்றும் விசாரணை பிரிவினால் ஒக்டோபர் 02 ஆம் திகதி அழைக்கப்பட்டதாக. துனுளு அமைப்பு அறிக்கையிட்டுள்ளது.

ஆதாரம்: https://twitter.com/JDSLanka

02. **போராட்டத்தின் செயல்பாட்டாளரான பைசான் அகமத் கைது செய்யப்பட்டு பின்னர் விடுதலை செய்யப்பட்டமை.**

அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் முன்னாள் செயற்பாட்டாளராகவும் இருந்த அவர், ஒக்டோபர் 8ஆம் திகதி தெஹிவளை பாத்திய மாவத்தையில் உள்ள அவரது வீட்டில் வைத்துப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு 4 மணிநேர விசாரணையின் பின்னர் விடுவிக்கப்பட்டுள்ளார்.

ஆதாரம்: https://twitter.com/JDSLanka

## சட்டவிதி முறைகள் அல்லது சட்டரீதியான கட்டுபாடுகள்

**ஒக்டோபர் மாதத்தில் ஊடக சுதந்திரம் தொடர்பான சட்டவிதி முறைகள் அல்லது சட்டரீதியான கட்டுப்பாடுகள் என்ற ஆக்கக் கூறுக்குள் உள்ளடங்கும் 11 சம்பவங்கள் அவதானிக்கப்பட்டன. அத்துடன் கருத்துச் சுதந்திரத்துக்கு எதிரான பாதுகாப்புப் துறையின் செயற்பாடு மற்றும் அந்தச் சுதந்திரத்தைப் பாதுகாப்பதற்கான சாதகமான தலையீடுகள் சில நீதிமன்றத் தீர்ப்புகள் மற்றும் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் முடிவுகள்மூலம் மேற்கொள்ளப்பட்டன. பொதுவாகக் கருத்துச் சுதந்திரத்தையும் குறிப்பாக ஊடக சுதந்திரத்தையும் மட்டுப்படுத்தும் அரசாங்கத்தின் நடவடிக்கைக்குப் பாரிய சவாலாகக் குறித்த தலையீடுகளை குறிப்பிடலாம்.**

**அட்டவணை 03 – 2022 ஒக்டோபர் : சட்ட விதிமுறைகள் அல்லது சட்டரீதியான கட்டுப்பாடுகள்–11 சம்பவங்கள்**

| குறிகாட்டி | அறிக்கையிடப்பட்ட சம்பவங்களின் எண்ணிக்கை |
|---|---|
| சட்ட நடவடிக்கை மேற்கொள்ளல் | 09 |
| புதிய சட்டங்களை விதித்தல் | 02 |
| **மொத்தம்** | **11** |

01. **கொழும்பின் பல பகுதிகளை உயர் பாதுகாப்பு வலயங்களாகப் பெயரிட்டு அரசாங்கம் வெளியிட்ட வர்த்தமானி அறிவித்தல் ரத்து செய்யப்பட்டமை.**

அரச இரகசியச் சட்டத்தின் இரண்டாவது பிரிவின் கீழ், செப்டம்பர் 23ஆம் திகதி, ஜனாதிபதியினால், 2298ஃ53 இலக்கம் கொண்ட இந்த விசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டதுடன், ஒக்டோபர் 1ஆம் திகதி, ஜனாதிபதியினால் அது இரத்துச் செய்யப்பட்டது.

குறித்த வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள பிரதேசங்களில், பொலிஸ் மா அதிபர் அல்லது மேல் மாகாணத்திற்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபரின் முன் எழுத்துப்பூர்வ அனுமதியின்றி ஆர்ப்பாட்டங்கள் அல்லது கூட்டங்களை நடத்துவதற்கு தடை விதிக்கப்பட்டது. இதற்கு இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் உட்பட இன்னும் பல அமைப்புக்கள் தமது எதிர்ப்பைத் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. இந்நடவடிக்கை குடிமக்களின் அடிப்படை உரிமைகளை மீறும் செயல் எனவும், இது தொடர்பான அறிவிப்பை அரசு திரும்பப் பெற வேண்டும் எனவும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு தமது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

ஆதாரம்: https://www.newsfirst.lk

02. **பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டிருந்த மாணவர் செயற்பாட்டாளர் ஹசான் ஜீவந்த விடுதலை செய்யப்பட்டமை.**

தங்காலை மற்றும் கொழும்பு தடுப்பு மையங்களில் 50 நாட்கள் தடுத்து வைக்கப்பட்டிருந்த அவர், பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரால் ஒக்டோபர் 7ஆம் திகதி தங்காலை நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டார். குற்றப்பத்திரிகை எதுவும் தாக்கல் செய்யப்படாத காரணத்தால் அவரை விடுதலை செய்ய நீதவான் உத்தரவிட்டார். இவர் கடந்த ஆகஸ்ட் 18ஆம் திகதி கொழும்பில் அனைத்து பல்கலைகழக மாணவர் ஒன்றியத்தின் அழைப்பாளர் வசந்த முதலிகேவுடன் கைது செய்யப்பட்டார்.

ஆதாரம்: https://medialk.com

03. **காலிமுகத்திடலில் நடைபெற்ற "போராட்ட மாவீரர் நினைவேந்தல்" நிகழ்ச்சிக்குப் போலீசார் இடையூறு விளைவித்ததுடன், அதில் பங்கேற்ற 6 பேரைக் கைது செய்தமை.**

கடந்த ஒக்டோபர் மாதம் 9ஆம் திகதி நடைபெற்ற இந்த நிகழ்வைச் சட்டவிரோதமான கூட்டம் எனக் கருதி கலைக்க காவல்துறையினர் உத்தரவிட்டதுடன், போராட்டத்தில் ஈடுபட்ட 6 பேரைக் கோட்டை காவல்துறையினர் கைது செய்தனர். இவர்களில் உவிந்து ராஜபக்ஷ என்ற 16 வயது பாடசாலை மாணவன் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

சந்தேகநபர்களான ரொஷான் பெர்னாண்டோ, தனுஷ்க லக்மால்

ஜயமான்ன, லியனகே விமலசிறி, மொஹமட் ஜராப் மொஹமட் மற்றும் தேஷான் இம்ரோன் ஆகியோர் ஒக்டோபர் 10 ஆம் திகதி கோட்டை நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்ட பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

ஆதாரம்: http://www.colombopage.com

**04. வழக்கறிஞர்கள் மற்றும் தொழில் வல்லுனர்களின் போராட்டத்தைத் தடுக்க வேண்டும் என்று காவல்துறை விடுத்த கோரிக்கையை நீதிமன்றம் நிராகரித்தமை.**

ஒக்டோபர் 9ஆம் திகதி நடைபெற்ற “போராட்ட மாவீரர் நினைவேந்தல்“ நிகழ்விற்கு பொலிஸார் இடையூறு விளைவித்தமைக்கு எதிராக ஒக்டோபர் 10ஆம் திகதி காலிமுகத்திடல் மைதானத்தில் போராட்டம் நடத்த திட்டமிடப்பட்டிருந்ததுடன், அதனை இடைநிறுத்துமாறு பொலிஸாரின் கோரிக்ை கோட்டை நீதவான் நிராகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஆதாரம்: https://www.bbc.com

**05. ஒக்டோபர் 9ஆம் திகதி காலிமுகத்திடல் பூமியில் அமைதியான முறையில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள்மீது பொலிசார் தலையிட்டமை தொடர்பில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு சுயமாக விசாரணைகளை ஆரம்பித்தமை.**

இலங்கை இளம் ஊடகவியலாளர்கள் சங்கமும் இந்த விடயம் தொடர்பில் விசாரணைகளைக் கோரியதுடன், சம்பந்தப்பட்ட கூட்டத்தைக் கலைக்க உத்தரவிடப்பட்ட சட்ட விதிகள் தொடர்பில் தெளிவுபடுத்துமாறு அடுத்த நாளே பொலிஸ் மா அதிபருக்கு ஆணைக்குழு அறிவித்தது. இது தொடர்பான விசாரணை ஒக்டோபர் 18-ம் திகதி ஆரம்பிக்கப்பட்டதுடன் இளம் ஊடகவியலாளர்கள் சங்கம் சம்பவத்துடன் தொடர்புடைய 21 ஆவணங்கள் மற்றும் காணொளிகளைக் கொண்ட ஆதாரங்களைச் சமர்ப்பித்தது. மேலும், இடையூறு ஏற்படுத்திய 8 காவல்துறை அதிகாரிகள்பற்றிய ஆதாரங்கள், தகவல்கள் மற்றும் இன்னும் 11 அதிகாரிகளின் புகைப்படங்கள் சமர்ப்பிக்கப்பட்டன.

ஆதாரம்: https://medialk.com

**06. பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ள வசந்த முதலிகே மற்றும் கல்வெவ சிறிதம்ம தேரர் ஆகியோரின் தடுப்புக்காவல் உத்தரவை நீடிக்க வேண்டாமென இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு அறிவித்தமை.**

இந்தச் சந்தேகநபர்கள் தொடர்பான விசாரணைகள்குறித்து முன்னேற்ற அறிக்கையைப் பயங்கரவாத விசாரணைப் பிரிவினர் இதுவரையில் ஆணைக்குழுவிடம் வழங்கவில்லை எனவும், அவர்கள் தொடர்ந்தும் சிறைவைக்கப்படுவதும் துன்புறுத்தப்படுவதும் நாட்டின் அரசியலமைப்புக்கு எதிரானது எனவும் அந்த அறிக்கையில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை, தங்காலை சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த சந்தேகநபர்களை நீதிமன்றத்திற்கு அறிவிக்காமல் கொழும்பு பயங்கரவாத புலனாய்வுப் பிரிவுக்கு அழைத்துச் சென்றமை தொடர்பில் சட்டத்தரணி நுவன் போபகே தங்காலை நீதவான் நீதிமன்றில் கடந்த ஒக்டோபர் 26ஆம் திகதி அறிக்கையிட்டார். இதனையடுத்து, இந்த விடயம் தொடர்பில் எதிர்வரும் ஒக்டோபர் 28ஆம் திகதி நீதிமன்றில் முன்னிலையாகி சாட்சியமளிக்குமாறு பயங்கரவாத விசாரணைப் பிரிவின் பணிப்பாளரை நீதவான் உத்தரவிட்டார். கடந்த 28ஆம் திகதி வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது, விசாரணைகளின் முன்னேற்றத்தை நவம்பர் 4ஆம் திகதி நீதிமன்றில் முன்னிலைப்படுத்துமாறு நீதவான் உத்தரவிட்டார்.

ஆதாரம்: https://www.facebook.com/Liveat8.lk

**07. புனர்வாழ்வு பணியக சட்டமூலத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ‘போராளி’ மற்றும் ‘வன்முறையாளர்கள்’ ஆகிய வார்த்தைகளை அதிலிருந்து நீக்க வேண்டும் என உச்ச நீதிமன்றம் பாராளுமன்றத்திற்கு தெரிவித்தமை.**

புனர்வாழ்வு பணியக சட்டமூலம் 23 செப்டம்பர் 2022 அன்று நீதியமைச்சரால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டதுடன் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம் மரிக்கார் மற்றும் ஏனைய தரப்பினர் இந்தச் சட்டமூலத்தை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மனுக்களைத் தாக்கல் செய்தனர். இந்தச் செயலைப் போராட்டக்காரர்களுக்கு எதிராகப் பயன்படுத்த அரசு தயாராகி வருவதாகப் பலத்த சந்தேகம் எழுந்தது. குறித்த பணியகம் போதைக்கு அடிமையானவர்களின் மறுவாழ்வு தொடர்பான சட்டத்திற்குள் மட்டுப்படுத்த வேண்டும் என்று உச்ச நீதிமன்றம் முடிவு செய்துள்ளது.

ஆதாரம்: https://www.bbc.com

**08. அமைதியான போராட்டத்தை முறைகேடாகத் தடுத்ததாக எழுந்த புகாரில் உயர் காவல்துறை அதிகாரிகள் இருவருக்கு நீதிமன்றம் நோட்டீஸ் அனுப்பியுள்ளமை.**

இலங்கை இளம் ஊடகவியலாளர் சங்கத்தின் சார்பில் கோட்டை நீதவான் நீதிமன்றில் ஊடகவியலாளர் தரிந்து ஜயவர்தன தாக்கல் செய்த தனிப்பட்ட வழக்கு தொடர்பில் உதவி பொலிஸ் அத்தியட்சகர் நளின் தில்ருக் மற்றும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ரொஷான் டயஸ் ஆகியோருக்கு நோட்டீஸ் அனுப்பப்பட்டுள்ளது.

ஒக்டோபர் 9 ஆம் திகதி வழக்கறிஞர்கள், ஊடகவியலாளர்கள் மற்றும் தொழில் வல்லுநர்கள் கலந்து கொண்ட போராட்டத்தைச் சட்டவிரோதமாகத் தடுத்ததாகக் காவல்துறை அதிகாரிகள்மீது குற்றச்சாட்டுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. ஜனாதிபதி சட்டத்தரணி சாலிய பீரிஸ், சட்டத்தரணி மனுஜய சில்வா மற்றும் சட்டத்தரணி ஜயந்த தெஹியத்த ஆகியோர் இந்த முறைப்பாட்டை பிரதிநிதித்துவப்படுத்துகின்றனர்.

ஆதாரம்: https://satahan.blog

**09. அமைதியான போராட்டக்காரர்கள்மீது தாக்குதல் நடத்துவதற்கு பொலிஸ் அதிகாரிகள் மற்றும் வளங்களைப் பயன்படுத்தியமை தொடர்பில் இலஞ்சம் அல்லது ஊழல்பற்றிய சாத்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு விசாரணைகளை ஆரம்பித்தமை.**

இளம் வழக்கறிஞர்கள் சங்கம் மற்றும் இளம் ஊடகவியலாளர்கள் சங்கம் இணைந்து நிறுவிய அடக்குமுறை எதிர்ப்பு நடவடிக்கைக் குழு செப்டம்பர் 22 ஆம் திகதி அன்று செய்த புகாரைத் தொடர்ந்து பீசீ/1760/2022 என்ற எண்ணின் கீழ் இந்த விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

ஆதாரம்: https://satahan.blog

10. **காவல்துறையினர் களனி பல்கலைக்கழகத்திற்கு முன்பாக இடம்பெற்ற மாணவர் போராட்டத்தைக் கலைத்ததுடன் போராட்டத்தில் கலந்துகொண்ட 8 மாணவர்களைக் கைது செய்தமை.**

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ள மாணவர் தலைவர்களை விடுவிக்கக் கோரி அனைத்து பல்கலைகழக மாணவர் ஒன்றியம் கடந்த ஒக்டோபர் 18ஆம் திகதி இந்தப் போராட்டத்தை ஏற்பாடு செய்திருந்ததுடன் குறித்த போராட்டத்திற்கு காவல்துறையினரிடம் அனுமதி பெறப்படவில்லை என்று குறிப்பிட்டு போராட்டத்தைக் கலைக்க உத்தரவிடப்பட்டது. அங்குக் கைது செய்யப்பட்ட கெலும் முதன்நாயக்க, டில்ஷான் ஹர்ஷன, ஷஷிக தில்ஹார, விஹங்க லஹிரு, அசேல மதுவந்த, கிஹான் குமார, பிரான்சிஸ் ஜீவன் மற்றும் கொஹொம்பகனே சிறிரதன தேரர் ஆகியோர் கடந்த 19ஆம் திகதி மஹர நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

ஆதாரம்: 1. https://www.newsfirst.lk
2. https://www.newsfirst.lk

11. **தகவல் அறியும் உரிமைக்கான ஆணைக்குழு பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டவர்களின் தகவல்களை வெளியிடுமாறு காவல்துறைக்கு உத்தரவிட்டமை.**

சட்டத்தரணி சுரேன் டி பெரேராவினால் தாக்கல் செய்யப்பட்ட மேன்முறையீட்டு மனுவை விசாரித்த தகவல் அறியும் உரிமைக்கான ஆணைக்குழு இந்தத் தீர்மானத்தை வழங்கியது. 2019ஆம் ஆண்டு முதல் 2021ஆம் ஆண்டு நவம்பர் மாதம்வரை பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களின் எண்ணிக்கை மற்றும் அவர்களின் விபரங்களைக் கோரியமைக்கு பொலிஸ் தலைமையகம் மறுத்ததன் காரணமாக இந்த மேன்முறையீடு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பான தகவல்களை ஒக்டோபர் 28ஆம் திகதிக்கு முன்னர் பெற்றுக்கொடுக்குமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்ட ஆணைக்குழு, குறித்த காலப்பகுதிக்குள் இந்தத் தகவல்களை வழங்காவிட்டால், இலங்கை காவல்துறை மற்றும் தகவல் அதிகாரிக்கு எதிராக நீதவான் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யத் தீர்மானித்துள்ளதாகவும் தெரிவித்துள்ளது.

ஆதாரம்: https://rticsr.info/ptarti/

## கட்டமைப்பு ரீதியான விதிமுறைகள்

**'கட்டமைப்புரீதியான விதிமுறைகள்" ஊடக சுதந்திரத்தின் மற்றொரு முக்கிய அங்கமாகும். ஊடக தொகுதியின் முழு கட்டமைப்பிற்கும் மற்றும் ஊடக சுதந்திரம் இயக்கப்படும் ஒட்டுமொத்த சூழலுக்கும் பொருந்தக்கூடிய 06 சாத்தியமான குறிகாட்டிகளை உள்ளடக்கியுள்ளது. அவற்றில் "கண்காணிப்புக் குழுக்களின் ஊடக சுதந்திரத்திற்கான செயல்திறன்சார் ஆதரவு" என்ற குறிகாட்டியின் கீழ் இரு சம்பவங்கள் ஒக்டோபர் மாதத்தில் அவதானிக்கப்பட்டது. மனித உரிமை பாதுகாவலர்கள் மேற்கொண்ட பல தலையீடுகள் இந்தக் குறிக்காட்டியுடன் தொடர்புடையதாக இருந்த போதிலும், நடைமுறை சிக்கல் காரணமாக, அவை அனைத்தும் இங்குத் தனித்தனியாகக் குறிப்பிடப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.**

**அட்டவணை 04 – 2022 ஒக்டோபர் கட்டமைப்பு ரீதியான விதிமுறைகள் – 02 சம்பவங்கள்**

| குறிகாட்டி | அறிக்கையிடப்பட்ட சம்பவங்களின் எண்ணிக்கை |
|---|---|
| கண்காணிப்பு குழுக்களின் ஊடக சுதந்திரத்திற்கான ஆதரவு | 02 |
| **மொத்தம்** | **02** |

01. அரச ஊழியர்களின் கருத்து சுதந்திரத்தை கட்டுப்படுத்தும் வகையில் வெளியிடப்பட்டுள்ள சுற்றறிக்கையை ரத்து செய்யுமாறு தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பு அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளது.

பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு 2022 செப்டம்பர் 27 ஆம் திகதி அன்று இந்தச் சுற்றறிக்கையை வெளியிட்டது. அதற்கு முன்னர் சுகாதார அமைச்சகம், சமூக ஊடகங்கள் உட்பட வெகுசன ஊடகங்கள்மூலம் தங்கள் கருத்துக்களை வெளியிடுவதற்கான அரச ஊழியர்களின் சுதந்திரத்தை கட்டுப்படுத்தியது.

அகில இலங்கை அபிவிருத்தி உத்தியோகத்தர் சங்கம், குடும்பநல சுகாதார உத்தியோகத்தர்கள் சங்கம், ஒன்றிணைந்த அபிவிருத்தி அதிகாரிகள் மையம், அரச மற்றும் மாகாண அரச முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்களின் தொழிற்சங்க சம்மேளனம் மற்றும் ஒன்றிணைந்த சுகாதார சேவையாளர் சங்கம் என்பன இந்தச் சுற்றறிக்கையை இரத்து செய்யுமாறு கோருகின்றன.

ஆதாரம்: https://www.youtube.com

02. ஊடகவியலாளர் மயில்வாகனம் நிமலராஜன் படுகொலை செய்யப்பட்டு 22 வருடங்கள் பூர்த்தியாவதை முன்னிட்டு வெவ்வேறு மூன்று நினைவேந்தல் நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டமை.

நிமலராஜன் 2000ஆம் ஆண்டு ஒக்டோபர் 19ஆம் திகதி உயர் பாதுகாப்பு வலயத்தில் உள்ள அவரது வீட்டில் வைத்துச் சுட்டுக்கொல்லப்பட்டார், மேலும் அது தொடர்பில் குற்றம்சாட்டப்பட்ட இராணுவத்திற்கு ஒத்துழைத்த ஆயுதம் தாங்கிய குழுவைச் சேர்ந்தவர்கள் சட்டமா அதிபரின் தலையீட்டின் பின்னர் விடுவிக்கப்பட்டனர்.

இந்த நினைவேந்தல் நிகழ்வுகள் நவம்பர் 19 ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் உள்ள யாழ் ஊடக அமையம், முல்லைத்தீவில் உள்ள முல்லைத்தீவு ஊடக அமையம், மட்டக்களப்பு மாவட்ட தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம் மற்றும் மட்டு ஊடக அமையத்தின் உறுப்பினர்களால் காந்தி பூங்காவில் நடைபெற்றது.

ஆதாரம்: https://tamilwin.com

**அட்டவணை 5 : ஊடக சுதந்திரம் : 2022 ஜனவரி முதல் செப்டம்பர் வரையான காலப்பகுதிக்குள் சுதந்திர ஊடக இயக்கத்தால் அறிக்கையிடப்பட்ட சம்பவங்களின் எண்ணிக்கை**

| உள்ளடக்கப்பட்டுள்ள குறிகாட்டிகள் | 2022 ஜனவரி–செப்டம்பர் | | 2022 ஒக்டோபர் |
|---|---|---|---|
| | புதிய சம்பவங்கள் | முன்னைய சம்பவங்களின் வளர்ச்சிப்போக்கு | |
| பாதுகாப்பு மற்றும் உத்தரவாதம் | 55 | | 02 |
| சட்டவிதி முறைகள் அல்லது சட்டரீதியான கட்டுப்பாடுகள் | 88 | 21 | 11 |
| ஊடக சுயாதீனத்துவம் | 06 | | - |
| தொழில்சார் நிபுணத்துவம் | 06 | | - |
| கட்டமைப்பு ரீதியான விதிமுறைகள் | 14 | 01 | 02 |
| **மொத்தம்** | **169** | **22** | **15** |

2022 ஊடக சுதந்திர உரிமைகள் கண்காணிப்பு அறிக்கை ஜனவரி வரை இங்கு பார்வையிடவும்

**பின்னுரை:** சிவில் சமூக குறிக்கோள்கள், தேசிய மற்றும் சர்வதேச வழக்கு தீர்ப்புகள் மற்றும் அனைத்துலக பிரகடனங்களுக்கு ஏற்ப, ஊடக சுதந்திரம் என்பது மனித உரிமை என சுதந்திர ஊடக இயக்கம் உடன்படுவதுடன்.அனைத்து மனிதர்களுக்கும் காணப்படவேண்டிய சிந்தனை சுதந்திரம், மனசாட்சி சுதந்திரம், மதச்சுதந்திரம் மற்றும் மற்றவர்களின் கருத்துக்களை தெரிந்து கொள்வதற்கான அடிப்படை உரிமைகளை தடையேதும் இன்றி அனுபவிப்பதற்கான சுதந்திரமே மனித உரிமையாகும். இந்த அடிப்படையில் ஊடக சுதந்திரம் என்பது பின்வரும் பத்து பகுதிகளை உள்ளடக்கிய தொகுப்பு என சுதந்திர ஊடக இயக்கம் கருதுகின்றது.

(1) சிந்தனை சுதந்திரம் (2) கருத்து தரிப்பதற்கான சுதந்திரம் (3) கருத்து வெளிப்படுத்தும் சுதந்திரம் (4) அமைதியான முறையில் மேற்கொள்ளப்படும் ஒன்றுகூடல் உரிமை மற்றும் கருத்து தெரிவிக்கும் சுதந்திரம் (5) தகவல் அறியும் உரிமை (6) கேட்டல் மற்றும் பார்த்தல் வழி சார்ந்த பதிவு செய்தல் மற்றும் அறிக்கை வைத்துக்கொள்வதற்கான சுதந்திரம் (7) பதிப்புச்சுதந்திரம் (8) செய்திப்பத்திரிகை சுதந்திரம் (9) இலத்திரனியல் ஊடக சுதந்திரம் (10) இணைய சுதந்திரம். என்பனவையே இதன் பகுதிகூறுகள் ஆகும்.

இந்த ஒவ்வொரு பகுதிகளும் ஒன்றோடொன்று தொடர்பு உடையதாக காணப்படுவதனால் ஒரு பகுதிகூறுக்கு ஏற்படும் வரையறைகள் மற்றும் தாக்கங்கள் ஊடக சுதந்திரம் தொடர்பில் காணப்படும் அனைத்து பகுதிக்கூறுக்கும் தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதை சுதந்திர ஊடக இயக்கம் ஏற்றுக்கொள்கின்றது. எனவே பொறுப்பற்று மற்றும் வெறுப்புணர்வுடன் மேலே குறிப்பிட்ட சுதந்திரங்களை அத்துமீறி அனுபவிப்பதானது சிறந்ததொரு முறையல்ல என்பதனை சுதந்திர ஊடக இயக்கம் கருதுகின்றது.

இந்த மாதாந்த அறிக்கை தயாரிக்கபடுவது பொது ஊடகத்தில் பிரசுரிக்கப்படும் மற்றும் சுதந்திர ஊடக இயக்கத்திற்கு கிடைக்கப்பெறும் தவல்களுக்கு அமைய மேலதிக தகவல்களை தேடி அறிந்து அந்த நிகழ்வுகளை ஆய்வுக்குட்படுத்திய பின்னரேயாகும்.இந்த ஆய்வின் போது சுதந்திர ஊடக இயக்கம் மேலே குறிப்பிட்ட பத்து ஊடக சுதந்திர சுட்டெண் பகுதிகளை உள்ளடக்கிய சர்வதேச அளவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஏழு தொகுப்புகளின் ஊடாக தேர்ந்தெடுக்கப்பட்ட அடிப்படை அளவுகோல்களை கொண்டே கண்காணிப்பு நடவடிக்கையை மேற்கொள்கின்றது.


## Free Media Movement

Convener: Lasantha De Silva +94 71 166 7938, +94 77 810 7620 | Secretary: Hana Ibrahim +94 77 741 2995
Treasurer: Ananda Jayasekara +94 77 312 4850
No 96, Bernard Soysa Mw, Colombo 05. Tel: +94 112368895 Fax: +94 112368895;
Web: www.fmmsrilanka.lk, www.mediareform.lk
Email: fmmsrilanka@gmail.com | Facebook: https://www.facebook.com/fmm.srilanka
Twitter: https://twitter.com/FMMsrilanka | #FMM25